## வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2016

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் (203 அதிகாரம்) 213 ஈ (5) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ஊக்குவிப்புப் படி வருமானம் ரூபா 101,115,117 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 100,497,621 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஊக்குவிப்புப் படி வருமானம் ரூபா 617,496 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் உரியதாகச் செலுத்தப்படாத ரூபா 856,597 கூட்டுத்தொகையான ஊக்குவிப்புப் படிப் பணம் அட்டுறு செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய ஊக்குவிப்புப் படிச் செலவினம் ரூபா 96,423,178 ஆக இருந்த போதிலும், அதற்குரிய பட்டோலையில் அது ரூபா 96,169,280 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 253,898 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகளுக்காக செலுத்துவதற்குள்ள பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்களைத் தீர்த்தன் பின்னர் சேமிப்பில் மிகை ஏற்படுமாயின் அது தாமதமின்றி ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும். எனினும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தில் காணப்பட்ட ரூபா 18,132,382 தொகையான மிகை ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதியத்தின் கணக்குகளை ஒப்பீடு செய்து செயல்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்கான அறிக்கையும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதியவான அதிகாரத்தால் உறுப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 06(இ) உப பந்தியின் பிரகாரம் சகல படிகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிடம் கலந்துரையாடி ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படாமல் முன்னைய ஆண்டுகளைப் போன்றே

மீளாய்வாண்டின் போதும் பதவியணியினருக்காக ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட முறைமையின் பிரகாரம் ஊக்குவிப்புப்படி செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 96,423,178 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,692,728 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,032,467 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 339,739 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 அம் ஆண்டில் ஊக்குவிப்புப்படி வருமானம் ரூபா 14,481,756 இனால் அதாவது 14 சதவீதத்தால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 23(ஈ) பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள கட்டளை இலக்கம் 3 இன் பிரகாரம் ஊக்குவிப்புப் படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக பல்வேறு செயற்பாடுகளுக்காகவும் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்புப் படி நிதியத்தின் பணம் செலவிடக் கூடியதாக இருந்தமை அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் நிதியத்தின் பெறுவனவுகளிலிருந்து 95 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவொன்று ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கீழே குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களுக்காக நிதியத்தின் பணத்தை செலவிடுவதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது ஏதாவது மோட்டார் வாகனமொன்றைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றிணைத்தல், புதிதாக வடிவமைத்தல், பதிலீடு செய்தல், நுண்பகுப்பாய்வு செய்தல் மற்றும் வடிவமைப்பை மாற்றுதல் போன்றவற்றில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் தரப்பினர்களுக்கு பணக் கொடுப்பவு

(ஆ) சில பிழையான செயற்பாடுகளை இனங்காண்பதற்கான தகவல்களை வழங்குகின்ற அல்லது அவ்வாறான பிழையான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு பணக் கொடுப்பனவு

(இ) வருடமொன்றிற்கு ரூபா 100,000 தொகை வரையான ஆகக் கூடியதன் கீழ் திணைக்களத்தின் பதவியணியினரின் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக பணக் கொடுப்பனவு.

(ஈ) பாராட்டப்படக்கூடிய அல்லது விஷேட மதிப்பீடொன்று தேவையான திணைக்களத்தின் பதவியணியினர்களின் செயற்பாடுகளுக்காக வருடமொன்றிற்கு ரூபா 50,000 இனை விஞ்சாத வகையில் பணம் கொடுப்பனவுகள்

எனினும் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனமொன்றை மாற்றுதல் தொடர்பான தகவல்களை வழங்கும் பிழையான செயற்பாடுகளைக் கண்டறிவதில் மற்றும் ஈடுபடும் பதவியணியினருக்கான பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாராட்டப்படக்கூடிய மற்றும் விஷேட மதிப்பீட்டிற்கான முறையான வேலைத்திட்டமொன்று நிதியத்தினால் அமுல்படுத்தப்ட்டிருக்க வில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

சலுகை விலை அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களைக் கையளிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள் ஊக்குவிப்புப் படி முன்மொழிவுத் திட்டத்திற்குரித்தற்ற போதிலும், அந்தக் கட்டணத்திலிருந்து 1 சதவீதமான அளவும் ஊக்குவிப்புப் படி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு ஊக்குவிப்பு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்ட பணம் முறையே ரூபா 6,160,646 மற்றும் ரூபா 1,273,712 அக இருந்ததுடன் அந்தப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஊக்குவிப்புப் படி நிதியத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

06 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 65 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையாலும் 02 வருமான விடயங்களில் வருமான மதிப்பீடு காணப்பட்டாமையின் காரணமாகவும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிற்காக நிதியத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) கணக்கீடு | ஊக்குவிப்புப் படி சரியாகக் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | வங்கிக் கணக்குகளுக்காக தனித்தனியாக பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமை |